DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No.511/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | வடிவேல் முருகன் | Age | : | 47 |
| F/N | : | பச்சைமால் | Occupation | : | தலைமைக்காவலர் (மண்டபம் காவல் நிலையம்) |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 29th day of April 2024.

**29.04.2024**

**(எதிரி ஆஜராகவில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி மாசி (எ) மகாலிங்கம் என்பவரை தெரியும். கடந்த 16.01.2022ம் தேதி நான் உச்சிப்புளி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.முருகநாதன் என்பவருக்கு கிடைத்த தகவலின் பேரில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.பாலாஜி என்பவரும் சார்பு ஆய்வாளருடன் கல்கிணற்றுவலசை சுடுகாடு அருகே சென்றபோது மூங்கில் கம்புடன் இணைந்த ஈட்டியுடன் நின்ற நபர் எங்களை பார்த்தவுடன் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது அவரது பெயர் மாசி (எ) மகாலிங்கம் என்றும், வயது 43 என்றும், த/பெ. சந்தானம் என்றும் கூறினார். அவர் மங்களூரில் கடல் தொழில் செய்து வருவதாகவும் சொன்னார். அவரது கையில் 160 செ.மீ மூங்கில் கம்புடன் இணைந்த 28.5 செ.மீ இரும்பு ஈட்டி ஒன்று இருந்தது. சார்பு ஆய்வாளர் அவரை கைது செய்து விசாரித்தபோது எதிரி மாசி (எ) மகாலிங்கம் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடம் இருந்து மேற்படி இரும்பு ஈட்டியை அத்தாட்சி மூலம் சார்பு ஆய்வாளர் என் முன்னிலையிலும், பாலாஜி என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலும் நானும், பாலாஜி என்பவரும் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன் பின்னர் 13.00 மணிக்கு நிலையம் வந்து

எதிரி மீது வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**